செ.வெ.எண்:23/2019 நாள்:09.10.2019

## பத்திரிக்கைச் செய்தி

## வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வெள்ளிதோறும் நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.ஜெயகாந்தன் , இ.ஆ.ப. அவர்கள் வெளியிடும் செய்தி குறிப்பு : வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் **"வேலைவாய்ப்பு வெள்ளி"** என்ற தலைப்பின் கீழ் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்டவேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறுகிறது. அவ்வேலைவாய்ப்பு முகாமில் வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். வேலைநாடுநர்களும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினைப் பெறலாம். அதன் அடிப்படையில் **11.10.2019** அன்று வெள்ளிக்கிழமை காலை **10.00** மணி அளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

**கல்வித்தகுதி**: பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை . (ஐ.டி.ஐ, டிப்ளமோ உட்பட)

## தமிழ்நாடு அரசு சீருடைபணியாளர் தேர்வுக் குழுமம் (வுருேளுசுடீ) காவலர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடற்தகுதி தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள்

சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயின்று தமிழ்நாடு அரசு சீருடைபணியாளர் தேர்வுக் குழுமம் (வுருேளுசுடீ) நடத்திய காவலர் எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்ற சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த அனைத்து மாணவ/மாணவிகளுக்கும் உடற்தகுதி தேர்விற்கு இலவச பயிற்சி வகுப்புகள் மன்னர் துரைசிங்கம் கல்லூரியின் அருகில் உள்ள மாவட்ட திறந்த வெளி விளையாட்டு அரங்கத்தில் அக்டோபர் 10-ம் (10.10.2019) தேதி வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் தொடங்கப்பட உள்ளது. எனவே மேற்காணும் எழுத்து தேர்வில் வெற்றி பெற்ற மாணவ /மாணவிகள் இந்த உடல்தகுதி தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

::வெளியீடு::

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**